Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:- 5/2015 Date:- 04.08.2026

Deposition of witness for prosecution :- PW :-4

| | | | |
|---|---|---|---|
| Name | ரசிகா | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது கோபியில் வசித்துக்கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 குமுதா எனது அம்மா. ஆஜர் எதிரி எனது அப்பா. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அம்மாவும், அப்பாவும் என்னுடைய அம்மா வீட்டில் வைத்து காலை 06.00 மணிக்கு சண்டை போட்டு கொண்டார்கள்.

2. என்னுடைய அப்பா என்னுடைய அம்மாவை கட்டையால் கழுத்தில் அடித்துவிட்டார். அதனால் கீழே விழுந்துவிட்டார். நாங்கள் இருவரையும் சத்தம் போடவும் என் அப்பா சென்றுவிட்டார்.

3. என் அம்மா சிகிச்சைக்காக சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. என் அப்பாவும், அம்மாவும் எனக்கு 5 வயது இருக்கும் போதே பிரிந்துவிட்டார்கள். நான் வயதிற்கு வந்த பின்பு என் அப்பாவும் அம்மாவும் சேர்ந்துவிட்டார்கள். தற்போது 15 வருடங்களாக என் அப்பாவும் அம்மாவும் பிரிந்து வாழ்கிறார்கள்.

2. நான் தற்சமயம் என் அம்மாவின் பராமரிப்பில் இருக்கிறேன். என் அப்பாவின் பராமரிப்பில் இல்லை. என் அப்பாவுடன் பேச்சுவார்த்தை கிடையாது. சண்டை நடந்ததாக கூறும் சமயத்தில் நான் 11 ம் வகுப்பு படித்து வந்தேன்.

3. பிரச்சனை நடந்ததாக கூறும் இடம் வீட்டு காம்பவுண்டு சுவருக்குள் நடைபெற்றது. வீட்டில் பிரச்சனை ஏற்பட்டால் வெளியில் உள்ளவர்களுக்கு சத்தம் கேட்கும் என்றால் சரிதான்.

4. என் அம்மாவீட்டிற்கு அருகில் பூங்கொடி, ரேவதி ஆகியோருடைய வீடு உள்ளது. பிரச்சனை நடந்ததாக கூறும் சமயத்தில் நான் தூங்கி கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. பிரச்சனை நடந்ததாக கூறும் சமயத்தில் நானும் எனது தங்கச்சி அர்ச்சணா, அத்தை கலைவாணி மற்றும் சரவணன் ஆகியோர் இருந்தோம்.

5. மாமாவும் அத்தையும் எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் சம்பவம் நடக்கும்போதே அனைவரும் இருந்தோம். சரவணன் என்பவர் சம்பவம் நடந்தாக கூறும் சமயத்தில் அங்கு இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு அனைத்து விபரங்களும் தெரியும்.

6. சாட்சி பட்டியலில் உள்ள 3–7 வரையிலானவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். என்னுடைய அம்மாவை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் நான் பள்ளிக்கு சென்றுவிட்டேன். அதனால் யார் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

7. நான் 08.30 மணிக்கு பள்ளிக்கு சென்றுவிட்டேன். அதுவரை என் அம்மா என் வீட்டில் தான் இருந்தார். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். அந்த சமயத்தில் போலீசார் வேறு யாரையும் விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு நினைவில் இல்லை.

8. எனக்கும் எதிரியான அப்பாவிற்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றும் அதனால் என் அம்மாவிற்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறும் சமயத்தில் என் அப்பாவும், அம்மாவும் பிரிந்து இருந்தார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.